

கண்டியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை

வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சரநேரிஷ் ஜேமிஸ் (பீற்றர்)

அவர்களின் அமரத்துவம் குறித்த

# நினைவு மலர்

17.11.2011

# சமர்ப்பணம்

வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்து

எமக்கு நல் வழிகாட்டி நலமாய்

வாழ வைத்து எமது குடும்பம் மிளிர

மகா விருட்ஷமாய் விளங்கிய

எமது தந்தையின் பாதக்கமலங்களில்

இம்மலரை சமர்ப்பித்து நிற்கின்றோம்



இவ்வண்ணம்,
குடும்பத்தினர்.



மலர்வு
14.07.1940

உதிர்வு
18.10.2011

# அமரர்
# சரந்தேரிஸ் ஜேம்ஸ் [பீற்றர்]

ஆண்டுயர் கரவருஷமீதே ஐப்பசித் திங்கள்
ஆனதே மதியமர் மங்களவாரம் பகலவன் போயிட
பேர்பெறுதிரம் திருவாதிரை யாகிட அண்ணல்
பாரோர்புகழ் ஜேமிஸ்(பீற்றர்) காயமேவிட்டனன் காண்திதி சப்தமியே.

சிவமயம்



# தோத்திரப்பாக்கள்.

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்
செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும்
உருவாக்கும் ஆதலால் வானோரும்
ஆனைமுகத்தானைக் காதலாற் கூப்புவர்தம்கை.

## தேவாரம்

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியினுரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதந் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே

## திருவாசகம்.

சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன் நான்
கண்ணினை நின் திருப் பாதபோதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குண்
மணி வார்த்தைக் காக்கி ஐம்புலன்களாற
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தெனை செந்தாமைரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியேனேற்கே

## திருவிசைப்பா

ஏக நாயகனை யிமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல் வண்ணற் கருளி
பொன்னெடுஞ் சிவிகையா யூர்ந்த
மேகநாயகனன் மிகுதிருவிழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனையன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகனங்கி
யிரவியு மிந்திரனும்
தோர் வீதியிற்றேவர் குழாங்கள்
திசையனைத்தும் நின்று
பாரார் தொல்புகழ் பாடியுமாடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்த வெண்ணீற்றொளி போற்றி நின்று
ஆதி யாரருளாதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்.



## திருப்புகழ்

காரணம தாக வந்து புவிமீது
காலனணுகாதிசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநடமே புரிந்து வருவாயே
ஆரமுத மானதந்த மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர் கிளை மான வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே.

## நினைவு நூலிதழின் காப்பு.

கஜமுகவன் தனை நினைத்து கைதொழுது
காயமது விட்ட பீற்றரின் நினைவுமலர் எழுத
தூயகவி புனையும் சின்னப் பாண்டுறங்கன் தொழும்
வடமிருசை நெல்லிக் கிணற்றடிவேல் சரணே!



## ஆசிரியப்பா

இலங்கை மாநகர் துலங்கிடம் கண்டி மாநகரில்

உலர் இலை தேயிலை விளைந்திடும் உடுவெல நகரம்

உடுவெல நகர்தனில் வாழ்ந்தனர் பலபேர்

உத்தமர் சரநேரிஸ் உத்தமி பவியாம்

நேரிஸ் பவியும் வாழ்ந்திடும் காலம்

உத்தம புத்திரன் ஜேமிஸ் (பீற்றர்) ஒருவன் இவர்குத் தங்கையர்

- நால்வர் தானே.

பீற்றர் கற்ற கல்வி மதியம் மட்டில் நின்றன கல்விதனைக் கற்ற கூடம் மகாவித்தியாலயம் உடுவெல கல்வியறிவால் மிகுந்த பீற்றர் வடமாகாணம் மெல்ல நகர்ந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்திரண்டு ஆண்டேயாக ஆனது மாதம் அவர்க்குத் தெரியும் திகதியை அறியோம் வடமராட்சி வருகவென்று அழைத்தது இவர்கள் தமக்கு வாழ்விடமானது வடமராட்சியே இன்றுவரையும் வெதுப்பிடும் பண்டம் பல விதமாக பண்புடன் செய்வோர் பரம்பரையான தொழிலேயாகும். வெதுப்பகம் தானே !

குல முறையாக வாழும் காலம் வளமாய் மிளிர்கையில் குணமுயர் பீற்றர் இளைஞன் ஆகி மணமகன் ஆகியே மணமகளாக மைத்துனி தன்னைத்தானே விரும்பி ஏற்று

முதியோர் முன்னோர் ஆசி மொழிந்திட இல்லறம் ஏற்றனன்.
இவர்கள் வாழும் காலம் வையகம் தனிலே உத்தமபுத்திரருள் ஒரு மகன்தானேயாகும். இவர்க்கும் துணையென சகோதரிகள் மூவர்.

வெதுப்பகத் தொழில் தனை முதல்முதல் முறையேற்று பருத்தித்துறையூர் வெதுப்பகம் தனிலே ஆரம்பமாயின அனைவரும் விரும்பிடும் சுவையுறு பலவித பண்டம் ஆக்கியே கொடுத்து வெதுப்பகம் நற்பெயர் பெற்றன. ஆண்டுகள் மெல்ல நகர்ந்தது பலவாய் வேறு வெதுப்பகம் இவர் வரவு காத்திருந்தன. விருப்புடன் ஏற்றது நவிண்டில் வெதுப்பகம் நவிண்டில் கிராம மத்தியில் உள்ளது துவாரகா. துவாரகா வெதுப்பகம் உறக்கமில்லாது செயற்படலாயின. ஆண்டுகள் பலவாய் ஓடிமறைந்தன ஓய்வு பெற்றனன் பீற்றர். ஓய்வுக் காலம் உழைத்திட விரும்பி பாடசாலைகள் பலவே தேர்ந்து பகலிடைவேளை சிற்றுண்டிகள் பலவிதமாக செய்து கொடுத்து பணமும் தேடி பெரும் புகழும் தேடி வாழ்நாள் நகர்கையில் காலன் இவர் தம் கணக்கை முடித்திட விரைந்து வந்தனன் இரண்டாயிரத்து பதினொன்றாவது ஆண்டு மாதம் ஐப்பசித் தழிழேயாக ஆங்கில மாதம் அக்டோபர் ஆகும்.

திகதி பதினெட்டாகிட பகலோன் மெல்ல சாய்ந்து செல்ல மணிகாரன் ஆறுபதினைந்து காட்ட நடந்தது என்ன? கண்டியிற் பிறந்து வளர்ந்து யாழ்நகர் வந்து நவிண்டில் இருந்தவர் சிறியவர் பெரியோர் போற்றிட புகழ்ந்திட வாழ்ந்த பீற்றர் ஐயா!
வாய்மொழியேதும் சொல்லிடாமல் கட்டிலில் சாய்ந்தனன்.
சாய்ந்தவர் சற்றும் அசையவில்லை பீற்றர் ஐயா வாழ்வு நிறைவு.

## இல்லத்தரசை இழந்த மனைவி ராணியின் துயரம்.

அன்றெந்தன் முகம் பார்த்து அன்பு மொழி பேசி
இன்புற நாம் வாழ்ந்தோம் வளமாக நலமாக
பண்பிலுயர் என் உயிரே! ஓர் வார்த்தை பேசாமல்
இங்கு எனைத் தவிக்க விட்டு எங்கேதான் சென்றீர்கள்.
ஏங்கித் தவிக்கின்றேன் எண்ணித் துடிக்கின்றேன்.
ஏழுமலையாளும் சந்நிதி முருகனிடம் சென்றாயோ!
பாழும் பிணி வந்ததில்லை சூழ்ந்த வினை ஏதையா?
நாளும் பொழுதுமெண்ணி நான் துடியாய் துடிக்கின்றேன்
நமது குலமுறை மறந்து முருகனையே வணங்கி வந்தோம்.
வள்ளி மணவாளன் சந்நிதியான் திருப்பாதம் சாய்ந்திடய்யா.

## பிள்ளைகளின் பிரிவுறாத கண்ணீர்.

தந்தை தாய் தமர் தாரம் எல்லாம் சந்தையிற் கூட்டமோ?
அந்தநிலை அறிந்துதான் எமைப்பிரிந்து எங்கு சென்றீர்கள்.
எந்த இடம் போனாலும் இங்கு வரவேண்டும் காத்திருப்போம்
இறுதி மொழி எமக்கு ஏன் சொல்லவில்லை அப்பா!
கொள்ளியுடன் குடம் சுமந்து வல்லை மயானம் வரை நடந்து
கொள்ளிதனைச் சொருகிவிட்டு குடம்தனைப் போட்டுடைத்து
பெற்றகடன் முடித்து விட்டேன் மறுபிறப்பாய் வரவேண்டும்.
அம்மாவின் கண்ணீரில் இன்றும் நனைகின்றோம்.
ஆறுமுகவேலன் சந்நிதியான் வாசலிலே நின்றிடுங்கள்
ஆறுதலாய் நாமிருப்போம் சந்நிதியானை மறவாதீர் எங்களய்யா

### மருமக்கள் துயர்


உற்ற முறையாக உத்தமராய் நாம் வாழ வழிகாட்டி
ஏற்ற முறை எம்மை என்றும் மதித்தவரே இனியாரெமக்கு?
பற்று வைத்தீர் எம்மீது பாசம் வைத்தோம் உங்களிடம்
பாசக் கயிற்றுக்குள் சிக்குண்ட மாமாவே சந்நிதியான்
வாசலிலே சார்ந்திருக்க வேண்டுகின்றோம்.

## அன்னாரின் சகோதரர்கள் சிந்தும் கண்ணீர்.

அண்ணா என்று சொல்ல விதியற்றோம்.
தம்பியென்றழைக்க யாரெமக்கு
தூய திருக்குமரன் சந்நிதி வேலவனின் வீதி
ஆல மரநிழலில் அமைதியுற வேண்டுகின்றோம்.

## மைத்துனிமார் மைத்துனர்கள் சோகம்.

அத்தான் மச்சான் என்று கூவியழைக்கின்றோம்
எங்கேதான் உம் பயணம் எமக்கேனோ சொல்லவில்லை.
நெஞ்சு பொறுக்குதில்லை எம்மைத்துனரே? என்ன செய்ய
வஞ்சனை செய்துவிட்டான் காலன் என்ன செய்வோம்.



## பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் தாகம்.

பள்ளிக்குச் சென்று வர பாசமுடன் காத்திருந்து
அள்ளித் தந்துவிட்ட சிற்றுண்டி உண்ணமுன்னம்
துள்ளி அழத்தலறிப் புலம்பியதே தொலைபேசி
கிள்ளி எறிந்து விட்டோம். சிற்றுண்டி யாவையுமே
என்ன செய்வோம் தாத்தா! ஏது செய்வோம் அப்பப்பா
எமது விதி இதுதானோ? என் செய்வோம் ஏது செய்வோம்.

## நண்பர்கள் பகரும் துயர்.

நயவுரைகள் பேசும் நற்தவமே! நண்பா!
ஓயாது உழைக்க வேண்டும் என்ற மொழி எங்கே?
வாயூறும் உனைக் கண்டால் உன்சிற்றுண்டி உண்டதனால்
காயாமரமாகி கண்ணீர் சொரிகின்றோம், கந்தவேள்
திருப்பாதம் சார்ந்திட வேண்டுகின்றோம்.

## உற்றார் உறவினர் பிரலாபம்.

உற்றார் எங்களிற்கு ஓங்குதல் மரமானாய்
ஊரயலார் எங்களிற்கு உற்றபெரு நிழலானாய்
கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கை கொடுக்கும் தெய்வம் நீ
பெற்ற தெய்வமானவரே! பெருமையுடன் சாந்தி பெறு.

## தேற்றம்

மண்ணில் பிறந்தவர் யாருமிங் கொருநாளில் முடிவடைவர்
எண்ணிப் பாரிதை எல்லா மவன் செயல் எம்மாலாவதேது
பண்ணிப் பெருகிய பாவம் புண்ணியம் தாமே எம்பிறப்பாம்
எண்ணிக் கொள்ளிதை ஈசனடிக்கு ஏகும் வழிதேடீர்.

## வாழ்த்து

செந்தமிழும் திருமுறையும் வாழி !
செவ்வேந்தர் செங்கோலும் வாழி !
செந்நெல்லும் செழுமறையும் சேரவாழி !
செஞ்சுடர் வேல் திருவருளால் வையகம்

வாழி ! வாழி !
ஓம் தத்சத் ஓம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



## போக்குவரத்துத் தகவல் தொடர்பு

- இலங்கைப்படத்தில் பெருந்தெருக்களைக் குறிக்கப் பயன்படுத்தும் நிறம் சிவப்பு.

- இலங்கையில் சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம் கட்டுநாயக்கா.

- இலங்கையில் உள்நாட்டு விமானநிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் மட்டக்களப்பு, பலாலி, இரத்மலானை.

- இலங்கையின் சர்வதேச விமான நிலையத்தின் பெயர் பண்டாரநாயக்கா விமான நிலையம்.

- இலங்கைப்படத்தின் புகையிரதப் பாதையைக் குறிக்கப் பயன்படுத்தும் நிறம் கறுப்பு.

## இலங்கை பற்றிய தகவல்கள்.

- இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு 1948.02.04

- இலங்கையின் புனித வெள்ளரசு மரம் நடப்பட்டுள்ள இடம் மிகிந்தலை.

- இலங்கைக்கு வெள்ளரசுக் கிளையைக் கொண்டு வந்தவர் சங்கமித்தை.

- இலங்கையின் கலாச்சார முக்கோணப் பிரதேசம் அனுராதபுரம், பொலநறுவை, கண்டி.

❖ இலங்கையின் கைப்பணிப் பொருட்கள் தயாரிக்கப்படும் இடங்கள் லக்சல நிறுவனம், ஜனகலா கேத்திரம்.

❖ இலங்கையின் தேசிய விளையாட்டு

கரப்பந்தாட்டம்.

❖ சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமா டி.எஸ்.சேனாநாயக்கா

❖ இலங்கையில் முதல்முதலில் தேசிய கீதம் பாடப்பட்ட தினம் சுதந்திர தினம்.

❖ நுகர்வுக்காக வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலட்சினை. SLS

❖ தேசியக் கொடியின் நான்கு நிறங்களும்

குறிப்பவை.

1. சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிறத்தில் வாளேந்தியசிங்கம். சிங்கள மக்களை.
2. செம்மஞ்சள் நிறக்கீலம் தமிழ் மக்களை.
3. பச்சை நிறக் கீலம் முஸ்லிம் மக்களை
4. சுற்றிவர உள்ள மஞ்சள் நிறம் தேசிய ஒற்றுமை



- இலங்கைக்கு அண்மையிலுள்ள நாடு இந்தியா
- இலங்கையில் வாழ்கின்ற மக்கள் இலங்கையர் எனப்படுவர்.
- இலங்கையில் உள்ள இனமக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர்.
- சத்தம் போடாத விலங்கு, நீந்தத் தெரியாத விலங்கு எது?

  ஒட்டகம்.
- நாணயம் முதன்முதலில் தோன்றிய நாடு?

  ஸ்பெயின்
- உலகிலேயே சூடும் குளிரும் அதிகமுள்ள நாடு?

  ரஷ்யா
- உலகிலே மிகப் பெரிய மரம் எங்குள்ளது?

  அமெரிக்கா
- மரகதத்தீவு என அழைக்கப்படும் நாடு எது?

  அயர்லாந்து
- உலகில் மிகப்பெரிய பூங்கா எங்குள்ளது?

  கனடா
- நிலப்பரப்பு அடிப்படையில் மிகச் சிறிய நாடு எது?

  வத்திக்கான்

- பித்தப்பை இல்லாத முலையூட்டி எது?
  எலி
- உலகிலே மிகக்கடினமான பொருள் எது?
  வைரம்
- திருக்குறளில் இல்லாத ஒரேஒரு எழுத்து?
  ஔ
- சந்திரனில் அதிகமாகக் காணப்படும் கனிமம் எது?
  டைட்டானியம்.
- மொழியின் அடிப்படையில் இந்திய மாநிலங்கள் பிரிக்கப்பட்ட ஆண்டு எது?
  1956

## கைமருந்துகள் சில

- வல்லாரை இலைகளுடன் மிளகு சேர்த்து காலைமாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் மூலம் குணமாகும்.
- வேப்பிலையை மண்சட்டியில் போட்டு வாயை மூடி எரித்து சாம்பலை தேனுடன் சாப்பிடின் வயிற்றுப் புண் நீங்கும்.
- அன்னாசிப்பழத்தை தேன் தோய்த்து குறைந்தது நாற்பது நாட்கள் மதிய உணவுடன் சாப்பிடின் உடல் பலமடையும்.

- நொச்சி இலையைக் காயவைத்து இடித்துத் தூளாக்கி நீருடன் கலந்து குடிநீராகக் குடிக்க இருமல் கசம் நீங்கும்.
- நொச்சி இலையை நீர்விட்டு ஆவியை பிடிக்க உடல் வலி தலை வலி நீங்கும்.
- கீரை சமைக்கும் போது நெய்விட்டுச் சமைப்பின் உடல் நலம் பெறும்.
- இஞ்சியை இடித்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டால் மூக்கடைப்புத் தும்மல் நீங்கும்.
- அறுகம்புல்லை தேங்காய் நெய்யில் காச்சிப் புண்களுக்குப் போட காயம் நீங்கும்.
- இளநீருடன் சிறிது தேன் சேர்த்து வெறும் வயிற்றில் குடித்து வந்தால் சலம் சம்பந்தமான நோய்கள் தீரும்.
- தண்ணீருடன் தேன் கலந்து கொப்பளித்தால் வாய்ப்பாகத்தில் உள்ள பற்றீரியா அளிந்து போகும்.
- இருதய நோயுள்ளவர்கள் மாதுளம் பழத்துடன் தேன் கலந்து சாப்பிடின் குணமாகும்.
- சிறு குழந்தைகளுக்கு பாலுடன் தேன் கலந்து கொடுப்பின் அநாவசிய வருத்தங்கள் தவிர்க்கலாம்.
- கர்ப்பிணிகள் தேன் பருகினால் பிரசவம் சுகமாகும்.
- நெல்லிக்காய் சாற்றோடு பசுநெய் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டால் இருதயம் பலமாகும்.

- தேனீ கடித்தால் சின்னவெங்காயம் கசக்கி கொட்டிய இடத்தில் தேய்த்தால் விஷம்போய்விடும்.
- வெங்காயத்தை நெய்யில் வதக்கிச் சாப்பிட்டால் தூக்கம் தானாக வரும்.
- பேரீச்சம் பழம் இரத்த விருத்திக்கு நல்லது.
- அப்பிள் துண்டை தேனுடன் சாப்பிடின் கண் விருத்தியடையும்.
- தீப்பிடித்த காயங்களுக்கு கனிந்த வாழைப்பழத்தை புண்மீது தடவி வெற்றிலையால் மூடிக் கட்டினால் சுட்ட புண் ஆறும்.
- மூக்கில் இரத்தம் வருபவர் சிறிதளவு எலுமிச்சம் சாறு விட்டால் உடன் நிற்கும்.
- தாய்ப்பால் அதிகளவு சுரக்க உணவுடன் எள் கலக்கவும்.
- சலம் போவது கடினமாயின் எலுமிச்சம்பழச் சாற்றுடன் நல்லெண்ணெய் கலந்து சாப்பிடவும்.
- பசி இல்லாதவர் காலை சூரிய வெளியில் படுப்பின் பசி எடுக்கும்.
- வேப்ப மரங்களை வீட்டில் அதிகம் வளர்ப்பின் தொற்று நோய் பரவுவது குறையும்.
- ஆஸ்மா நோயுள்ளவர்கள் தினமும் திராட்சைப்பழம் சாப்பிடுவது நல்லது.

❖ வாய்நாற்றம் உள்ளவர்கள் எலுமிச்சம் பழச் சாற்றை நீரில் கலந்து கொப்பளிப்பது நல்லது.

## சிந்திக்கச் சில

❖ தவறு செய்வது மனித இயல்பு, மன்னிப்பது தெய்வீக இயல்பு.

❖ பேசாமல் இருப்பவன் ஊமை, எப்பொழுதும் பேசிக் கொண்டிருப்பவன் வாயாடி.

❖ பேச வேண்டிய இடத்தில் மட்டும் பேசுபவன் அறிவாளி.

❖ பெருமைக்காரன் கடவுளை இழக்கிறான்.
பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான்
கோபக்காரனோ தன்னையே இழக்கிறான்.

❖ மனைவிக்கு அடங்கி நடப்பவன் முட்டாள்.
மனைவியை அடங்கி ஆள நினைப்பவன் முரடன்
ஒத்து வாழும் வாழ்வை அறிந்தவனே கணவன்.

❖ வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீகள் ஏனென்றால் நேரத்தால் ஆனது தான் வாழ்க்கை.

❖ நாணயத்தை இழந்தவனிடம் இழப்புக்கு வேறொன்றும் இருக்காது.

# அறிந்து கொள்வோம்.

01 இலங்கையின் தேசிய கீதத்தை

1. சிங்கமொழியில் இயற்றியவர்:- ஆனந்த சமரக்கோன்
2. தமிழ்மொழியில் மொழிபெயர்த்தவர்:- மு.நல்லதம்பி
3. ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தவர்:- CWW கன்னங்கரா
4. இசை அமைத்தவர் :- ஆனந்த சமரக்கோன்

02. ஆதிவாசிகள் அதிகளவில் வாழ்ந்த சப்பிரகமுவப்பிரதேசம் இரத்தினபுரியில் உள்ளது.

03. இலங்கையின் தேசிய.....

1. விளையாட்டு :- கரப்பந்தாட்டம்
2. தேசியப்பறவை :- காட்டுக்கோழி
3. தேசிய மரம் :- நாகமரம்
4. தேசிய மலர் :- நீல அல்லி

04.இலங்கையில் உள்ள 9 மாகாணங்களும் அதிலுள்ள மாவட்டங்களும்...........

| மாகாணம் | மாவட்டம் | தலைநகரம் |
|---|---|---|
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | திருகோணமலை |
| | திருகோணமலை | |
| | அம்பாறை | |
| வடமாகாணம் | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| | கிளிநொச்சி | |
| | முல்லைத்தீவு | |
| | மன்னார் | |
| | வவுனியா | |

| | | |
|---|---|---|
| மேல்மாகாணம் | கொழும்பு<br>சப்பிரகமுவ<br>களுத்துறை | கொழும்பு |
| தென்மாகாணம் | காலி, மாத்தறை<br>அம்பாந்தோட்டை | காலி |
| வடமேல் மாகாணம் | குருநாகல், புத்தளம் | குருநாகல் |
| மத்தியமாகாணம் | கண்டி,நுவரெலியா<br>மாத்தளை | கண்டி |
| சப்பிர<br>கமுவமாகாணம் | இரத்தினபுரி<br>கேகாலை | இரத்தினபுரி |
| வடமத்திய<br>மாகாணம் | அனுராதபுரம்<br>பொலநறுவை | அனுராதபுரம் |
| ஊவா மாகாணம் | பதுளை<br>மொனறாகலை | பதுளை |

05. அதிகளவு சனத்தொகை கொண்ட மாகாணம் எது?
    மேல் மாகாணம்

06. அதிகளவு சனத்தொகை கொண்ட மாவட்டம்
    கொழும்பு மாவட்டம்

07. இலங்கையில் அதிகளவு நெல் உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்கள் :- குருநாகல், பொலநறுவை, அம்பாறை

08. இலங்கையில் அதிகளவு குளங்கள் கொண்ட மாவட்டம். :- அனுராதபுரம்

09. இலங்கையில் மட்டும் காணப்படும் தாவரம்
    ஓர்க்கிற்

10. இலங்கையின் இயற்கை துறைமுகம் அமைந்துள்ள மாவட்டம் :- திருகோணமலை

## விளையாட்டு தகவல்கள்

01. 10 ஆவது உலகக்கிண்ண கிரிக்கற் போட்டி எங்கு நடைபெற்றது :- இலங்கை, இந்தியா, பங்களாதேஷ்
02. 28ஆவது ஒலிம்பிக்போட்டி எப்போது எங்கு நடைபெறும்
    2012 இல், இங்கிலாந்தின் லண்டன் நகரில்
03. இலங்கை கிரிக்கட் அணியில் விளையாடும் தமிழர் முத்தையா. முரளிதரன்
04. இலங்கை உதைபந்தாட்டஅணியில்விளையாடும் தமிழர் சண்முகராஜா. சஞ்சீவ்
05. இலங்கை வலைபந்தாட்ட அணியில் விளையாடும் தமிழர் :- தர்சினி - சிவலிங்கம்.
06. இலங்கையின் ஒலிம்பிக் வீரர்கள் டங்கன்வைற், சுசந்திகா ஜெயசிங்க.
07. வொலிபோல் ஆரம்பத்தில் எப் பெயரால் அழைக்கப்பட்டது. :- மின்ரோநெற்
08. வொலிபோலில் உள்ள விதிமுறைகள் எத்தனை 30
09. காற்பந்தாட்டத்தில் உள்ள விதிகள் எத்தனை :- 17
10. இலங்கையில் முதலில் காற்பந்தாட்டத்தை ஆரம்பித்த பாடசாலை எது எப்போது ஆரம்பிக்கப்பட்டது
    1881 இல், யாழ்ப்பாணசென்பற்றிக்ஸ் கல்லூரியில்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
14 - 07 - 1940



மறைவு
18 - 10 - 2011

துவாளி கண்ணகி அம்மன் ஆலய பரிபாலனசபை திரு-ராஜா அவர்களின்
அன்புத்தந்தையாரான

அமரர்

## சரநேரிஸ் ஜேமிஸ் (பீற்றர்)

மலையொன்று சரிந்தது! விரிகடல் வரண்டது!
சிலையொன்றே கல்லானது!
திருமுறைகள் ஓலமிட்டன!
கீத ஒலிகள் ஏன் நின்றன?
காலம் கொடியது அது யாரையும் விடுவதில்லை
தேடிட்ட வாழ்க்கை இன்று ஓடி விட்டது.
ஆடிட்ட உறவுகள் அருகிருந்து அழுகின்றோம்
காலம் விட்ட முறையில் மரணம் வந்தது
ஓலம் இட்டு அழுவதே நியதியாச்சு
நாதமிட்ட நாளமொன்று ஓசையின்றிப் போனதுவாய்
மரணம் வந்தது நீர்ச்சுழியிலே
தேடுகிறோம் தேடுகிறோம் உம் முகம்
தேடுமிடமெங்கும் உம் குரல்!
மாநிலத்துப் பிறந்தாரெல்லாம்
ஆண்டொரு காலம் முடிந்து
ஆண்டவன் அடி சேர்வதே
அவன்தான் முடிவென்று
தேடுகின்றோம் நாம்

அவர்கள் (18.10.2011) அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

---

**துவாளி கண்ணகி அம்மன்**
**ஆலய பரிபாலன சபையினர்.**

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 14 - 07 - 1940



உதிர்வு 18 - 10 - 2011

எமது நண்பன் ராஜா அவர்களின் அன்புத்தந்தையாரான

அமரர்

## சரநேரிஸ் ஜேமிஸ் (பீற்றர்)

செல் ஒன்று இருக்கும் போது
இறப்பாகின்றன படைத்தல் தொழில்
புரியும் பிரம்மா இறப்பையும்
சேர்ப்பிக்கின்றான் - உயிர்கள் ஆணவத்தின்
பிடியில் கட்டுண்டு இருக்கின்றன
ஆன்மா - ஆணவத்தால் பிடிக்கப்படுவதால்
வலிமையை கெட விடுவதில்லை
ஆணவம் எப்ப வலி கெடுகின்றதோ
அப்போதுதான் இறைவனிடம் ஆன்மா
முத்திப்பேறு அடைகின்றது....
சிகரத்தில் சிங்கமாய் வாழ்ந்த சிங்கமே
உங்கள் இறப்பினால் மனங்கள் நலிக்கின்றது
உங்கள் வாசங்கள் இன்னும் இறைசாந்தி
அடைய வேண்டுவோமா.....

அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

ராஜாவின் உற்ற நண்பர்கள்,
உடுப்பிட்டி.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்

1940
07
14

மறைவு

2011
10
18

அமரர்

## சரநேரிஷ் ஜேமிஸ் பீற்றர்

அன்பாலே எமை அரவணைத்த தந்தையே
பார் போற்ற பரணியிலே வாழ்ந்தவரே
புன்னகை தவழும் உங்கள் பூமுகம்
இனி எங்கு காண்போம் ?
தேம்புகின்றோம் உமை எண்ணி
ஆயினும் இறைவன் திருப்பாதத்தில்
இரண்டறக்கலந்த எம் தந்தைக்காய்
வேண்டுகின்றோம் இறைவனை..........


சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நினைவுடன் :- SMA பிறிண்டேஸ் உடுப்பிட்டி.

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடி வந்து உதவிகள் புரிந்து ஆறுதல் கூறியோர்க்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோர்க்கும், தொலைவில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல், தேறுதல் கூறியோர்க்கும், திருமுறை படித்த பெரியோர்க்கும், கிரிஜைகள் சிறப்புற நடத்திய அந்தணப் பெரியோர்க்கும், இன்று அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளிற் பங்கேற்றுக் கொண்டவர்களிற்கும், இம்மலரினை ஆக்கி அச்சிட்டுத்தந்த நல் உள்ளங்களுக்கும். மேலும் பல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தோர்க்கும் எம் இரு கரம் குவிந்த வணக்கங்கள் நன்றிகள் உரித்தாகுக.

சின்ன உடையார் வளவு,
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி



இங்ஙனம்,
குடும்பத்தினர்

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



SMA பிறின்டேஸ், உடுப்பிட்டி 0778500045

No: 100